
# திராவிடத்தால் வாழ்கிறோம்

829

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

62

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

## ‘திராவிடர் கழகம்’ பிரச்சார இயக்கமே!

*1944*-இல் சேலத்தில் ‘நீதிக்கட்சி’யும் ‘சுயமரியாதை இயக்கமும்’ இணைந்து திராவிடர் கழகமாக உருவெடுத்த மாநாட்டிற்கு சிலரது எதிர்ப்பையும் மீறி, பெரியாருடன் உறுதியோடு நின்றவர் பேரறிஞர் அண்ணா. ஆனால், அடுத்த ஒரு சில ஆண்டுகளிலேயே முரண்கள் முளைக்கத் தொடங்கிவிட்டன. ‘லேபிள் வேண்டாம்’, ‘உள்ளம் உடையும் முன்’, ‘ராஜபார்ட் ரங்கதுரை’, ‘மரத்துண்டு’, ‘இரும்பாரம்’ போன்ற அண்ணாவின் உருவகக் கதைகள் அனைத்தும் அதற்கு கட்டியம் கூறின. இந்தியாவின் விடுதலை விவகாரத்திலும் பெரியாரும் அண்ணாவும் மாறுபட்ட நிலைப்பாடுகளை எடுத்தனர்.

இந்த விரிசல் முற்றி, தொண்டர்கள் மத்தியில் வெளிப்படையாக உடைந்தது 08.05.1948 அன்று. அந்நாளில்தான் தூத்துக்குடியில், ‘2 நாள் திராவிடர் கழக 18-வது மாகாண மாநாடு’ தொடங்கியது. “மாநாட்டிற்கு எல்லோரும் கருஞ்சட்டை அணிந்து வாருங்கள்” என்று கட்டளையிட்டிருந்தார் பெரியார். ஆனால் கருப்புச்சட்டை அணிந்து வந்தால், மாநாட்டை நிறுத்திவிடுவோம் என்று அன்றைய தூத்துக்குடி ஜில்லா எஸ்.பி. எச்சரிக்கை விடுத்திருந்தார். 75,000 பேர் கலந்துகொள்ள பிரமாண்டமாக நடைபெற்றது ஊர்வலம்.

ஒரே நேரத்தில் நான்காயிரம் பேர் அமர்ந்து சாப்பிடக்கூடிய அளவுக்கு பிரமாண்ட உணவுப் பந்தல் போடப்பட்டிருந்தது. குழந்தைகளுக்காக 100 தொட்டில்கள் கட்டப்பட்டிருந்தன. 30-க்கும் மேற்பட்ட ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டிருந்தன.




புத்தககக் கடைகள், படக் கடைகள், ஜவுளி, சில்லறை சாமான் கடைகள், சிற்றுண்டிச் சாலைகளும் இருந்தன. இரவில் மின்னொளியில் மிளிர்ந்தது மாநாட்டுப் பந்தல். காலையில் கே.கே.நீலமேகம் கொடியேற்றிட, டி.பி.வேதாசலம் மாநாட்டைத் திறந்துவைத்து சொற்பொழிவாற்றினார்.

மாநாட்டிற்கு அண்ணா வரவில்லை, அது சலசலப்பை ஏற்படுத்தியது. திராவிடர் கழகத்தின் நோக்கம், லட்சியம், கடந்த வரலாற்றை விளக்கும் வகையில் முதல் நாளில் தலைமையுரை நிகழ்த்தினார் பெரியார். “தோழர்களே, திராவிடர் கழகம் ஜஸ்டிஸ் கட்சியைப் போல ஒரு கட்சியல்ல, பிரச்சார இயக்கம் என்று 10 ஆண்டுகளாகச் சொல்லி வருகிறேன். 1925-இல் நாம் ஆரம்பித்து நடத்தி வந்த சுயமரியாதை இயக்கம், ஜஸ்டிஸ் கட்சியைக் கைப்பற்றி இப்பத்தாண்டுகளாக பிரச்சாரம் செய்து வருகிறதே ஒழிய, இது ஒரு தனிக்கட்சியினர் கையில் இல்லை. சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளில் திராவிடர் கழகத்திற்கு எம்மாறுதலும் இல்லை. சேலம் மாநாட்டின் அண்ணாதுரை தீர்மானமே அதை தெளிவுபடுத்திவிட்டது” என்று பேசினார் பெரியார்.

இரண்டாவது நாளில், காந்தியடிகள் படுகொலைக்கு அனுதாபம், திராவிட நாட்டின் சுதந்திரம், சென்னை மாகாணத்தில் உள்ள உணவு விடுதிகளை அரசே ஏற்று நடத்த வேண்டும், ஜாதி ஒழியும் வரை ஜாதிவாரிப் பிரதிநிதித்துவம் அமலில் இருக்க வேண்டும், ரயில்வே சிற்றுண்டிச்சாலை பணிகளில் குறிப்பிட்ட ஜாதியினர் மட்டும் இருப்பதற்குக் கண்டனம், மின்சாரத் துறையில் பார்ப்பனர்களே அதிக வேலைகளில் இருப்பதற்குக் கண்டனம், திருமண பதிவு செய்யும் அதிகாரத்தை சப் ரிஜிஸ்டார்களுக்கும் வழங்க வேண்டும், வடமொழியைத் திணிப்பதை நிறுத்த வேண்டும் உள்ளிட்ட 33 தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டில் 25,000 பெண்கள் உட்பட ஒரு லட்சத்து 25 ஆயிரம் பேர் பங்கேற்றதாக ‘விடுதலை’ ஏட்டின் செய்திகள் கூறுகின்றன. ‘ஒருபோதும் திராவிடர் கழகம் தேர்தலில் பங்கெடுக்காது, கருப்புச்சட்டையே திராவிடர் கழகத்தின் அடையாளம்’ என்று பெரியார் தனது உறுதியை உலகுக்கும் கழகத்திற்கும் உணர்த்தினார்.

**...கூட்டம் திரளும்**

## அறிவியல் அன்றே கொல்லும்!

இது தமிழ்நாடு. இங்கே விஷத்தைத் தூவ முயற்சிக்க வேண்டாம். மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைக்க வேண்டாம் என பொன்னேரி அரசு மருத்துவமனையின் தலைமை மருத்துவர் அனுரத்னா, மதுரை ஆதீனத்தின் மத வெறுப்பு பேச்சுக்கு பதில் அளிக்கும் விதமாக தனது அனுபவத்தை முகநூலில் பகிர்ந்து உள்ளார். அவரது பதிவிலிருந்து...

"இரு தினங்களுக்கு முன்பு பிரசவத்திற்காக ஒரு பெண் பர்தா அணிந்து வந்திருந்தார். பெயர் கேட்டேன் ஷர்மிளா என்றார். நிமிர்ந்து பார்த்து மீண்டும் கேட்டேன். ஷர்மிளா என்றார். கூட இருந்த பெண்களும் பர்தா அணிந்து இருந்தனர். ஒருவேளை இந்து மதப் பையனைத் திருமணம் செய்துகொண்டு இந்து மதப் பெயருக்கு மாறி இருப்பாரோ என நினைத்தேன். அதன்பின் அடுத்த நோயாளர் பக்கம் போய்விட்டேன். இதை மறந்தும் போனேன்.

பிரசவத்தின்போது, பெரும்பாலும் அந்தப் பிள்ளைகளிடம் பேச்சு கொடுத்துக்கொண்டே பிரசவம் பார்ப்பது என் வழக்கம். இது அவர்களின் பய உணர்வை போக்கும் என்பதால்.

அதேபோல் ஷர்மிளாவிடமும், ‘உன் உண்மையான பெயர் என்ன?’ என்று கேட்டேன். ‘ஷர்மிளா தான் மேடம்’ என்றார். ‘கணவர் பெயர்?’ என்றேன். உடனே ‘கணவர் பெயர் முஸ்லிம் பெயர் தான் மேடம்’ என செவிலியர் சொன்னார். ‘ஷர்மிளா என்பது இந்து மதத்தினர் வைக்கும் பெயர். உன் குடும்பம், கணவரும் இசுலாமியர், உனக்கு ஏன் ஷர்மிளா என பெயர் வெச்சாங்க?’ என்றேன்.

‘நான் பிறக்கும் போது, அப்பா அம்மா மட்டும்தான் இருந்தாங்க மேடம், பாட்டி தாத்தா யாரும் பக்கத்தில் இல்லையாம், பக்கத்தில் இருந்த இந்து குடும்பங்கள்தான் எங்க அம்மாவை ஆஸ்பத்திரியில் சேர்த்தார்களாம் மேடம். நான் பிறக்கும்போது அவங்க உதவிக்கு இருந்ததால், அவங்களையே ஒரு பெயர் வைக்க சொன்னாராம் அப்பா, அவங்க ‘ஷர்மிளா’ என பெயர் வெச்சிருக்காங்க மேடம்’ என்றார். உங்க அப்பாக்கு மிகப்பெரிய மனசு என்றேன் ஷர்மிளாவிடம். உனக்கு பிரசவம் பார்த்ததிலும் எனக்கு ரொம்ப சந்தோசம் என்றேன்.

மட ஆதீனம் (மதுரை ஆதீனம்) அவர்களே..... உங்களை போல நான் பொய் சொல்லல. உண்மையை சொல்றேன்.


ஷர்மிளா குடும்பம் இசுலாமைப் பின்பற்றுகிறார்கள். தன் கஷ்டத்தில் உதவிய பிற மதத்தினரை நினைவுகூர மறக்கவில்லை. நன்றியோடும் இருக்கிறார்கள். இதுதான் தமிழ்நாடு.

கடவுள் நின்று கொல்லுமோ கொல்லாதோ, அறிவியல் (CCTV) அன்றே கொல்லும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்" என்கிறது அவரது பதிவு.

## ஃப்ளாஷ்பேக்



### மயிலையில் நடந்த பாராட்டு விழா!



மு.தம்பிதுரை

1989-ஆம் ஆண்டு தேர்தலில், கழக சட்டத்துறைச் செயலாளர் ந.கணபதி அவர்கள் மயிலாப்பூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அவரது வெற்றியை வாழ்த்தியும், நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டமும் 10.04.1989 அன்று இனமானப் பேராசிரியர் தலைமையில் நடைபெற்றது.

அப்போது, கணபதி அவர்களின் வெற்றிக்குப் பாடுபட்ட கழகத்தினருக்கு, பேராசிரியர் சால்வை அணிவித்துப் பாராட்டினார். மயிலை 130-வது வட்டச் செயலாளர் மு.தம்பிதுரை ஆகிய நான் பாராட்டு பெற்றபோது, மயிலை நா.சம்பந்தம், மயிலை பகுதிச் செயலாளர் சு.மாசிலாமணி, மூத்த வட்டச் செயலாளர் பாலகிருஷ்ணன் அவர்கள் உடனிருந்தனர்.

**– மு.தம்பிதுரை,
மாநில மீனவர் அணித் துணைச் செயலாளர்,
மயிலாப்பூர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

62

**சுயமரியாதை-சமத்துவம்-
சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## சிறைச்சாலை என்ன செய்யும்?

கழக வரலாற்றில் சில ‘சிறை டைரி குறிப்புகள்’ முக்கியத்துவம் வாய்ந்தவை. ‘மிசா’வில் கைதாகி சிறையில் வதைப்பட்டு உயிர்துறந்த ‘கொள்கை மறவர்’ சிட்டிபாபுவின் ‘சிறை டைரி குறிப்புகள்’ சமகாலத்திலும் பெரும் கவனத்தை ஈர்க்கும் ஒன்று. அடி, உதை தாண்டி வேகாத உணவில் வேப்பெண்ணெய் கலந்து கொடுமைக்குள்ளாக்கியது என அதன் ஒவ்வொரு பக்கமும் அவசரநிலை காலத்தில் நடைபெற்ற துயர் மிகுந்த சிறை அனுபவங்களைப் பதிவு செய்திருக்கும்.

இந்நூலுக்கு சற்றும் சளைக்காத வகையில், வரலாற்றுத் தரவுகளையும், சுவாரசியமான சம்பவங்களையும் கொண்டிருக்கும் மற்றொரு நூல், ‘தென்பகுதி மண்ணின் சின்னமருது’ என்று தலைவர் கலைஞர் அவர்களால் செல்லமாக அழைக்கப்பட்ட சிறுகதை மன்னர் எஸ்.எஸ்.தென்னரசு அவர்களின் சிறை நினைவுக் குறிப்புகளை உள்ளடக்கிய ‘பெண்ணில்லாத ஊரிலே...’ என்ற நூல்.




செப்டம்பர் மாதம் என்றாலே திராவிட இயக்க வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த மாதம் பெரியார் பிறந்தது. தி.மு.க. பிறந்தது, அண்ணா பிறந்தது எல்லாமே செப்டம்பர் திங்களில்தான்! 1964-ஆம் ஆண்டு தி.மு.க. தலைமை அதே செப்டம்பர் மாதத்தில்தான் அரசியல் சட்டத்தின் மொழிப்பிரிவை எரிக்க, அனுமதி அளித்தது, இப்போராட்டத்தை மேற்கொண்டு ஓராண்டு சிறை தண்டனை பெற்று மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டவர் தென்னரசு அவர்கள். இதைப் போலவே நெருக்கடி நிலை அமலில் இருந்தபோது, மிசாவிலும் கைதாகி ஓராண்டு சிறையில் இருந்தார். 1986-ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது சட்ட எரிப்புப் போராட்டத்திலும் பங்குபெற்று கைதானார். 1964-ஆம் ஆண்டு முதல் 1986-ஆம் ஆண்டு வரையிலான இந்தச் சிறை அனுபவங்களையெல்லாம் தொகுத்து வரலாற்றுக் குறிப்புகளுடன் முத்தமிழறிஞர் கலைஞர், பேராசிரியர், நாஞ்சிலார் ஆகியோரது வாழ்த்துரையுடன் வெளியாகி இருக்கிறது இந்நூல்.

சிறையைத்தான் அவர் ‘பெண்ணில்லாத ஊரிலே...’ என்று இலக்கிய நயத்துடன் தலைப்பாகச் சூட்டியுள்ளார், அங்கு நடைபெற்ற சம்பவங்கள் எல்லாம் கோர்வையாக கால வரிசையில் இந்நூலில் வழங்கப்பட்டுள்ளன. 1964-ஆம் ஆண்டு 12 மாத சிறைக் காவலின் போது குன்றக்குடி அடிகளாரைக் கொண்டு கூட்டம் நடத்தியது, எஸ்.எஸ்.ராஜேந்திரன் நடித்த ‘பூம்புகார்’ படத்தைத் திரையிட ஏற்பாடு செய்தது, அண்ணாவும், கலைஞரும், இதர கழகத்தவரும் சிறையில் வந்து தன்னை சந்தித்து நலம் விசாரித்தது, விடுதலையின் போது தலைமைக் கழகத்தில் இருந்து அனைவரும் நேரில் வந்து வரவேற்றது, ராஜாஜியிடம் இருந்து வந்த கடிதம் என வியப்பூட்டும் பல வரலாற்றுச் சம்பவங்கள் இந்நூலில் இடம்பெற்றுளன.

இந்த நூலில், எஸ்.எஸ்.இராஜேந்திரன், நாவலர் நெடுஞ்செழியன், எம்.ஜி.ஆர்., இரா.செழியன் போன்றவர்களைப் பற்றிய குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன. இவற்றையெல்லாம் மறைத்திருக்கலாம். ஆனால் மறைக்காமல் வெளிப்படையாக எழுதியதால்தான் அவர் தென்னரசாக உயர்ந்து நிற்கிறார்.

கழகத்தின் இலட்சியப் பணிக்காக சிறைசென்ற அனுபவங்களைத் தொகுப்பாகக் கொண்டு வெளியாகியிருக்கும் இந்நூல், இன்றைய இளம் தலைமுறை கொள்கை உறுதி கொண்டு வீறுநடை போட அவசியம் பயன்படும்.

**...வாசிப்போம்.**

## கருவூலம்

### நாடகம் நடத்தி, சொந்த கட்டடம்!

1951-ஆம் ஆண்டில், கழகத்திற்குச் சொந்தமாக ‘அறிவகம்’ கட்டடம் வாங்கப்பட்டது. அந்தக் கட்டடத்தைத் தேடித்தந்தவர், அண்ணாவின் நண்பர் டபிள்யூ கே.தேவராஜ். கழகத் தோழர்கள் நாடகங்கள் நடத்தித் திரட்டிய நிதியிலிருந்து கட்டடம் வாங்கப்பட்டது. 1951-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ஆம் தேதி அறிவகத்தைக் கழக முன்னோடி வி.எம்.ஜான் திறந்து வைத்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131